RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 53 மார்ச்.1 2026 ஞாயிற்றுக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# சென்னை வந்தார் பிரதமர் மோடி: பா.ஜ.,வினர் உற்சாக வரவேற்பு

சென்னை: மார்ச்.1-

பிரதமர் நரேந்திர மோடி நேற்று இரவு 8.50 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அவருக்கு, கவர்னர் ரவி, மத்திய இணையமைச்சர் எல்.முருகன், தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பிரதமரின் வருகையையொட்டி சென்னை விமான நிலையம் மற்றும் கிண்டி சுற்றுவட்டாரப் பகுதிகள் 'சிவப்பு மண்டலமாக' அறிவிக்கப்பட்டு, ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவரது பயணத் திட்டத்தின் முக்கிய விவரங்கள்:

சென்னை கவர்னர் மாளிகையில் தங்கும் பிரதமர் மோடி காலை சென்னை கடற்கரை எழும்பூர் இடையேயான 4வது ரயில் பாதையை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.



அதை தொடர்ந்து, புதுச்சேரியில் காலை 11:45 மணிக்கு ரூ.2,700 கோடி மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

PM e-Bus Seva திட்டத்தின் கீழ் மின்சார பஸ்கள், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடங்களை திறந்து வைக்கிறார்.புதுச்சேரியில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

அங்கிருந்து மதுரை செல்லும் அவர், மதியம் 3:00 மணிக்கு ரூ.4,400 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்புத் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

தமிழகத்தில் மேம்படுத்தப் பட்ட 8 ரயில் நிலையங்களை (பொள்ளாச்சி, காரைக்குடி, திருவாரூர் உள்ளிட்டவை) காணொலி வாயிலாகத் திறந்து வைக்கிறார்.

என்எச் 332ஏ ( மரக்காணம் புதுச்சேரி) மற்றும் என்எச்87 (பரமக்குடி ராமநாதபுரம்) ஆகிய சாலைகளை நான்கு வழிச்சாலையாக மாற்ற அடிக்கல் நாட்டுகிறார். மாலை 4:00 மணியளவில் மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சாமி தரிசனம் செய்கிறார்.

அதனை தொடர்ந்து மதுரை மண்டேலா நகர் மைதானத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணி பிரம்மாண்ட தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார். இந்த பயணத்தின் மூலம் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மொத்தம் ரூ.7,100 கோடிக்கும் அதிகமான திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட உள்ளன.

# அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தீவிரத் தாக்குதல் நடப்பது என்ன?

தெஹ்ரான், மார்ச்.1-

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தீவிர தாக்குதலை தொடங்கியுள்ளன. ஈரான் சரணடைய வேண்டும் அல்லது மரணத்தை சந்திக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரானின் தலைநகர் தெஹ்ரான் உள்ளிட்ட பல நகரங்களின் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. ஈரானும் பதில் தாக்குதல்களை தொடங்கியுள்ளது.

அமெரிக்காவின் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொள்ள ஈரானுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வரும் நிலையில், இந்த அணுசக்தி பேச்சுவார்த்தைகளில் ஈரானின் நிலைப்பாடு குறித்து தான் "மகிழ்ச்சியடையவில்லை" என்று ட்ரம்ப் நேற்று தெரிவித்தார். இதனையடுத்து இன்று ஈரான் மீது தாக்குதல்கள் தொடங்கப்பட்டன.'

'ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியை குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் அவர் தெஹ்ரானில் இல்லை. அவர் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்' என்று ஈரான் தரப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக, கடந்த ஜூன் மாதம் ஈரான் இஸ்ரேல் இடையே நீடித்த 12 நாள் போர், ட்ரம்பின் தலையீட்டால் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து அணு ஆயுதத்தை கைவிடுவது குறித்து ஈரானுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தையை தொடங்கியது.

ட்ரம்ப் மிரட்டல்: ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தாக்குதல் தொடங்கிய சிறிது நேரத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதள வீடியோவில், "ஈரானில் ஒருபோதும் அணு ஆயுதம் இருக்க முடியாது. அதனால்தான் ஆபரேஷன் மிட்நைட் ஹேமர் மூலம் ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹானில் ஈரானின் அணுசக்தி திட்டங்கள் தாக்கப்பட்டன.

ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை கைவிடுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும் நிராகரித்துவிட்டது. ஐரோப்பாவில் உள்ள நட்பு நாடுகளையும், வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க துருப்புக்களையும் அச்சுறுத்தக்கூடியதும், விரைவில் அமெரிக்காவை அடையக்கூடியதுமான நீண்ட தூர ஏவுகணைகளை உருவாக்குவதை ஈரான் தொடர்ந்தது.

ஈரானிய ஆட்சியானது, அமெரிக்காவை குறிவைத்து முடிவில்லாத ரத்தக்களரி மற்றும் படுகொலை பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. இதனால் ஈரானில் அமெரிக்கா பெரிய போர் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

ஈரானின் ஏவுகணைத் தொழிலை அமெரிக்கா தரைமட்டமாக்கி அதன் கடற்படையை அழிக்கப் போகிறது. ஈரான் மக்களே இப்போதுள்ள ஆட்சியை தூக்கி எறிந்து, உங்கள் அரசாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது அநேகமாக தலைமுறைகளுக்கு உங்களுக்கான ஒரே வாய்ப்பாக இருக்கும்.

ஈரான் தனது ஆயுதங்களைக் கீழே போட்டால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும். இல்லையெனில் அவர்கள் நிச்சயமான மரணத்தை சந்திக்க நேரிடும்" என்றும் ட்ரம்ப் கூறினார்.








■ செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் B&G Play School மழலையர் பள்ளியில் annual project day play school and primary student சுமார் 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர்களுடைய திறமையை வெளிக்காட்டினர், விஞ்ஞானம், கலாச்சாரம், உணவு முறைகள், அன்றாட மனிதனோடு வாழ்க்கையில் ஒன்றுபட்டஉள்ள அனைத்து விஷயங்களையும் வண்ண படங்களாகவும் அனைத்தையும் செய்முறையில் செய்து காட்டி அசத்தினர், இந்த நிகழ்ச்சி மிக சிறப்பாகவும், அறிவுப்பூர்வமாக நடந்து அந்த பிஞ்சு குழந்தைகள் செய்த செயல்கள் பெற்றோர்களையும் மகிழ்ச்சியும் ஆழ்த்தியது, இந்த நிகழ்ச்சியை சிறப்பிக்க தலைமை விருந்தினராக chief guest திரு பா மகேந்திர பூபதி, PP நலச்சங்க கூட்டமைப்பு தலைவர் ,மற்றும் பள்ளியின் தாளாளர் திருமதி காயத்ரி பால்கரன் பெருவாரியான பெற்றோர்கள் குழந்தைகள் கலந்து கொண்டனர் இதைப் போன்ற குழந்தைகளை அறிவை வெளிக்கொணறுகின்ற நிகழ்ச்சிகள் மூலம் குழந்தைகளிடம் உள்ள சுடச்ச சுபாவத்தை நீக்கி அறிவு சார்ந்து அழைத்துச் செல்வதற்கு ஒரு தூண்டுதலாக அமையும் என்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் கூறினர் இந்தப் பள்ளி ஐந்து வருடங்களைக் கடந்து ஆறாவது ஆண்டு தனது கல்வி சேவையை தொடர்கிறது, இதனுடைய இந்த கல்வி நிறுவனத்தின் கிளை விரைவில் பப்பபையில் தொடங்க உள்ளனர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.







## நீலகிரி மாவட்டம் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கிராமிய சுற்றுலா மேம்பாட்டு பணிகளை உதகை சட்டமன்ற உறுப்பினர் திறந்து வைத்தார்

நீலகிரி, மார்ச்.01-

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலாத்துறை சார்பில் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட உல்லாடா கிராமத்தில் ரூ.1.80 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட கிராமிய சுற்றுலா மேம்பாட்டு பணிகளை, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் முன்னிலையில் திறந்து வைத்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் கடந்த 2024- 2025 ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின் படி, நீலகிரி மாவட்டம் கேத்தி பேரூராட்சி உல்லாடா கிராமத்தில், ரூ.25 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட பூங்கா, ரூ.3.88 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் தளம் ரூ.8.13 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை, ரூ.11.92 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட வடிகால் என மொத்தம் ரூ.1.08 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட பணிகள், இன்று திறந்து வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

இந்நிகழ்வில், சுற்றுலாத்துறை மண்டல மேலாளர் யுவராஜ், மாவட்ட சுற்றுலா அலுவலர் சங்கர், கேத்தி பேரூராட்சி தலைவர் ஹேமமாலினி, பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் நிர்வாகிகளை சந்தித்த மேற்கு மாவட்ட தலைவர் ஹரிஸ் பாபு

கிருஷ்ணகிரி, மார்ச்.01-

ஹரிஸ் பாபு, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்றதையடுத்து, கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களின் மூத்த நிர்வாகிகளை நேரில் சந்தித்து மரியாதை செலுத்தி வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக, காவேரிப்பட்டினம் பகுதியில், முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் அவர்களை சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்ததோடு, அவரிடமிருந்து ஆசியும் பெற்றார்.

தொடர்ந்து, முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் முத்துக்குமார், வட்டார காங்கிரஸ் தலைவர் விவேகானந்தன் ஆகியோரையும் சந்தித்து பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மேலும், காங்கிரஸ் மாநில செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ராஜேந்திர வர்மா, முன்னாள் மாவட்ட தலைவர் நாராயணமூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர் ஏகம்பவாணன் மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம்.சு. இரகு ஆகியோர் களையும் சந்தித்து சால்வை அணிவித்து ஆசியைப் பெற்றார்.

இந்த நிகழ்வில், காங்கிரஸ் கட்சியின் எஸ்.சி./எஸ்.டி. பிரிவு மாநில செயலாளர் மூர்த்தி, கெலமங்கலம் வட்டார காங்கிரஸ் தலைவர் சுந்தர்ராஜன், முன்னாள் இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் முனிராஜ், சூளகிரி வட்டாரத் தலைவர் முனியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சமையல் வேலைக்கு அழைத்துச் சென்று சிறுமியை கர்ப்பமாக்கிய முதியவருக்கு 20 ஆண்டுகள் சிறை



கன்னியாகுமரி, மார்ச்.01-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நீதிமன்றம் தீர்ப்பு செண்பகராமன் புதூர் பகுதியை சேர்ந்தவர் சாமிதாஸ் (63). இவர் மனநலம் பாதிக்கப்பட்ட 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததில் சிறுமி கர்ப்பமானார்,சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் நாகர்கோவில் மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். வழக்கை விசாரித்த நாகர்கோவில் போக்சோ நீதிமன்ற நீதிபதி சுந்தரய்யா குற்றம் சாட்டப்பட்ட சாமிதாசுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கினார்.

## அமைச்சர் மகன் பெயரில் விருப்ப மனு தாக்கல்



■ 2026 சட்டமன்ற தேர்தல் நெய்வேலி தொகுதியில் வேளாண்துறை அமைச்சர் மகன் எம். ஆர்.கே. கதிரவன் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தார் மாளிகம்பட்டு பரணி கேஷுயூஸ் உரிமையாளர் டி.பாண்டியராஜன். மற்றும் பாலமுருகன், அருள்வேல், ஆத்திரி குப்பம் வைத்தி உடன் இருந்தனர்.



## குண்டலபட்டி கு.ந.கொட்டாயில் பகுதியில் பகுதி நேர நியாய விலை கடை திறப்பு: 150க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம்

கிருஷ்ணகிரி, பிப்.28-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் குண்டலபட்டி ஊராட்சி கு.ந.கொட்டாய் பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கடையை திறந்து வைத்தார்.

இப்பகுதியில் 150க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருவதுடன், நீண்டகாலமாக நியாய விலை கடை அமைக்க கோரிக்கை விடுத்து வந்தனர். இதுவரை சுமார் நான்கு கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து ரேஷன் பொருட்களை பெற்றுவர வேண்டிய சிரமம் நிலவியது. புதிய கடை துவங்கப்பட்டதன் மூலம் மக்களுக்கு நேரமும் செலவும் மிச்சமாகும் நிலையில், பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்து சட்டமன்ற உறுப்பினருக்கு நன்றியை தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்ரமணி, சரவணன், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், கூட்டுறவு சார்பதிவாளர் சகுந்தலா, ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் காளியப்பன், மாவட்ட கலை இலக்கியப் பிரிவு மோகன், ஊர் கவுண்டர்கள் பெருமாள், கிருஷ்ணன், மாரியப்பன், கோவிந்தசாமி, குப்பன், திம்மராயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் திமுக நிர்வாகிகள் ஆர். கோவிந்தசாமி, கே.பி. செல்வம், ஹோட்டல் குப்புசாமி, மணிவேல், காவேரி, நாகப்பன், பழனி, காங்கிரஸ் கர்ணாமூர்த்தி உள்ளிட்ட பலர் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

## அலங்கியத்தில் ரூ.51 லட்சம் மதிப்பிலான திட்டங்கள் துவக்கம்: அமைச்சர் கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்து அடிக்கல் நாட்டினார்

திருப்பூர், மார்ச்.01-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தை அடுத்த அலங்கியம் திமுக மேற்கு ஒன்றிய பகுதியில் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தலைமையில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் துவக்கி வைக்கப்பட்டன. நிகழ்ச்சியில் தாராபுரம் முன்னாள் ஊராட்சி ஒன்றியக் குழு பெருந் தலைவரும், திமுக மேற்கு ஒன்றிய செயலாளருமான எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலை வகித்தார்.





தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2025-2026ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டில் ரூ.8.50 லட்சம் மதிப்பில் அலங்கியம் பேருந்து நிறுத்தத்தில் புதிதாக கட்டப்பட்ட பயணியர் நிழற்குடையை அமைச்சர் திறந்து வைத்து பொதுமக்கள் பயன் பாட்டிற்கு வழங்கினார். நீண்டநாளாக பேருந்துக்காக காத்திருக்கும் பொதுமக்கள், குறிப்பாக மாணவர்கள் மற்றும் பெண்கள், மழை மற்றும் வெயிலில் அவதியடைந்த நிலையில், இந்த நிழற்குடை பெரிதும் உதவும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, தாராபுரம்பழனி சாலை முதல் அலங்கியம் மேற்கு பகுதி வரை கனிமம் மற்றும் சுரங்க நிதி மூலம் ரூ.20.70 லட்சம் மதிப்பில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும், பழனி தாராபுரம் சாலை முதல் அலங்கியம் சாலை வரை ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியும் துவக்கி வைக்கப்பட்டது. மொத்தமாக ரூ.51 லட்சத்திற்கும் அதிகமான மதிப்பில் இந்த மூன்று பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இப்பணிகள் நிறைவடைந்தால் போக்குவரத்து வசதி மேம்பட்டு, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை எளிதில் சந்தைக்கு கொண்டு செல்லும் வசதி ஏற்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு மக்கள் நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார். அலங்கியம் பகுதியில் நிழற்குடை மற்றும் சாலை வசதிகள் அவசியம் என பொதுமக்கள் கோரிக்கை வைத்ததை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று நிதி பெற்றே இத்திட்டங்கள் செயல் படுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

மேலும், மாநிலம் முழுவதும் பெண்களுக்கு வழங்கப்படும் மகளிர் உதவித்தொகை திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற பெண்களுக்கு ரூ.5000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும், பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடைவதே அரசின் நோக்கமாகும் என்றும் தெரிவித்தார். அதேபோல், தாராபுரம் அரசு கூடுதல் மருத்துவமனை கட்டிடம் ரூ.24 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், விரைவில் அதனை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்து மக்கள் பயன்பாட் டிற்கு வழங்க உள்ளதாகவும் கூறினார். இந்த மருத்துவமனை செயல்பாட்டுக்கு வந்தால் சுற்றுவட்டார கிராம மக்களுக்கு அவசர சிகிச்சை உடனுக்குடன் கிடைத்து பல உயிர்கள் காப்பாற்றப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அலங்கியம் திமுக ஒன்றிய நிர்வாகிகள், ஊராட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





## தன்னாட்சி பெற்ற அண்ணா ஆதர்ஷ் பெண்கள் கல்லூரியில் 41 ஆம் ஆண்டு கல்லூரி தினம் விழா

சென்னை, மார்ச்.01-

சென்னை அண்ணா நகரில் உள்ள தன்னாட்சி பெற்ற அண்ணா ஆதர்ஷ் பெண்கள் கல்லூரியில் 41 ஆம் ஆண்டு கல்லூரி தினம் பிப்ரவரி 27, 2026 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி பட்டப் படிப்புகளை வழங்கி வரும் அண்ணா ஆதர்ஷ் கல்லூரியின் ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

கல்லூரியில் துணை முதல்வர் முனைவர் மீனா குமாரி அவர்கள் வரவேற்புரை நல்கினார். கல்லூரியில் முதல்வர் முனைவர் ஷெர்லின் டேவிட் அவர்கள் கல்லூரியின் ஆண்டு அறிக்கையை வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக சுங்கத்துறை மற்றும் ஜி.எஸ்.டி ஆணையர் திரு. நாசர் கான் மற்றும் சுங்கத்துறை மற்றும் ஜி.எஸ்.டி துணைஆணையர் திரு. அஜித் குமார் கலந்து கொண்டனர். திரு. நாசர் கான் அவர்கள் சிறப்புரையாற்றினார். சிறப்புரையை தொடர்ந்து கல்லூரியின் இதழான ஆதர்ஷ்வாணி வெளியிடப்பட்டது.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன அதனைத் தொடர்ந்து கலை, வணிகம் மற்றும் அறிவியல் துறைகளை சார்ந்த சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள், 62 மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் என மொத்தம் 102 பரிசுகள் வழங்கப்பட்டன. வணிகவியல் துறை தலைவர் முனைவர்.சுதா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

விழா தேசிய கீதத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

# மும்பை திமுக சார்பில் தாராவியில் முதலமைச்சர் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டம்: மும்பை பொறுப்புக்குழுத் தலைவர் ஜேசுராசு தலைமை

மும்பை, மார்ச்.01-

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மும்பை திமுக சார்பில் சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானக்கப்ட்டுள்ளது.



மும்பை திமுக பொறுப்பு க்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரையாற்றிட

மும்பை திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ பிறந்தநாள் கேக் வெட்டி சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன் மராத்திய மாநில விசிக அமைப்பாளர் எஸ்.சாலமோன் ராஜா, மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச் சந்திரன், ஆகியோரது முன்னிலையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் மும்பை கழகத்தின் மூத்த உறுப்பினர் விழுப்புரம் அரசூர் இரா.மதியழகன், மலபார்குன்று பகுதி திமுக செயலாளர் சேரை ச.பிரகாஸ்,கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகக்குழு உறுப்பினர் ஜாகிர் உசேன், மும்பை காங்கிரஸ் செயலாளர் கோபாலகிருஸ்ணன், ரவி குணசீலன், திருவள்ளுவர் நற்பணி மன்றம் தலைவர் ந.இராதா கிருஸ்ணன், மனித நேயம் அமைப்பாளர் சங்கர் திராவிட், தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரா.ரவிரஜினி, இதயம் அறக்கட்டளை தலைவர் மகேந்திரன் அண்ணாமலை,கொலாபா தமிழ்ச் சங்கம் தலைவர் வ.பன்னீர் செல்வம், பொன்.சுப்பி ரமணியன், இராசேந்திரன் மும்பை மகிழ்ச்சி மகளீர் பேரவை நிர்வாகிகளான வனிதா இளங்கோவன், சுமதி, மதியழகன்,வெண்ணிலா சுரேஸ், திராவிடர் கழக துணைத் தலைவர் இ.அந் தோணி, துணைச் செயலாளர் அ.கண்ணன், உலகநாதன், சி.பாண்டியன், அழகுராஜா,குப்பன், மகாவிஸ்ணு, ஒர்லி பகுதி திமுக செயலாளர்கள் இரா.காந்தி, கொலாபா அப்துல் திவான் மைதீன், வக்கோலா சேலம் மா.சீனிவாசன், ஜவேரிபஜார் வே.இரவிச் சந்திரன், கோலிவாடா பி.இராமையா, திமுக முன்னாள் இளை ஞரணி துணை அமைப்பாளர் பொய்சர் க.மூர்த்தி, கே.கே. செல்வராஜ் தாராவி பகுதி என்.வி.சண்முகராசன், தே.ஸ்டீபன், கோ. கருணாநிதி, மா.ராசன், கோவிந்தன், முனீஸ்வரன், காளிதாஸ் சேர்மன்துரை, எஸ்.செல்வராஜ், வக் கோலா அன்பில் ரஞ்சன் காளியப்பன் , கொலாபா ரமேஸ்,தாடி கருப்பையா, மகாராஜ், கழக பணிமனை காப்பாளர் க.ராசன் போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக் கின்றனர்.

திமுக பொறுப்புக்குழு உறுப்பினர் க.மு.மாணிக்கம் நன்றியுரையாற்றுகிறார்

நிகழ்ச்சியின் முடிவில் அனைவருக்கும் அசைவம் உணவு வழங்கப்பட உள்ளது.

கழக தலைவர் பிறந்த நாளை முன்னிட்டு கழக பணிமனை மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. மும்பையில் பல்வேறு பகுதிகளில் 73 இடங்களில் இனிப்புகள் வழங்கப் படுகிறது பிறந்த நாள் வாழ்த்து பதாதைகள் பரவலாக வைக்கப்பட்டுள்ளது .

# அ.தி.மு.க. ஆட்சியில் 3 முறை முதல்-அமைச்சராக்கிய ஓ.பன்னீர்செல்வத்தை, மனிதராக பார்ப்பதற்கே வெட்கமாக உள்ளது என்று கிருஷ்ணகிரியில் கே.பி.முனுசாமி பேட்டி

கிருஷ்ணகிரி, மார்ச்.01-

அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. கிருஷ்ணகிரியில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:-

**வெட்கமாக உள்ளது**

அ.தி.மு.க. ஆட்சியில் 3 முறை முதல்-அமைச்சராக இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம். அந்த இயக்கத்தில் இருந்து தனக்கான அடையாளத்தை காட்டியவர். ஆனால் இன்றோ அ.தி.மு.க. எதனால் உருவானதோ, இந்த இயக்கத்தின் தலைவர் எம்.ஜி.ஆர். யாரை தீய சக்தி என்று கூறினாரோ அவர்களிடம் இன்று ஓ.பன்னீர்செல்வம் போய் சேர்ந்துள்ளார். இது ஒரு வெட்க கேடான விஷயம். அவரை (ஓ.பன்னீர்செல்வம்) ஒரு மனிதராக பார்ப்பதற்கே வெட்கமாக உள்ளது.



இன்று அவர் எதை கசப்பான அனுபவம் என்று கூறுகிறார். 3 முறை முதல்-அமைச்சராக இருந்ததையா? சுய நலத்தின் மொத்த உருவமாக அவர் திகழ்கிறார். இயக்கத்தில் இருப்பவர்கள் தவறு செய்து நீக்கப்படும் போது அவர்கள் நீக்கப்படுவார்கள். அந்த தவறை அவர்கள் உணர்ந்து மன்னிப்பு கடிதம் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுப்பது தான் அ.தி.மு.க.வில் நடைமுறை.

ஆனால் இவரோ (ஓ.பன்னீர்செல்வம்) கடசிக்கு கட்டுப்படவில்லை. விளக்கம் அளிக்கவில்லை.

**பேதம் கிடையாது**

அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் புகுந்து தகராறு செய்தார். இருக்கையை உடைத்தார். கீழ்த்தனமாக செயல்களை செய்த அவரை பொதுக்குழுவில் இருந்து நீக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் முன்மொழிந்தனர். பின்னரே அவர் நீக்கப்பட்டார்.

அ.தி.மு.க.வை பொறுத்தவரையில் ஜனநாயக முறையில் இயங்க கூடிய கட்சி. எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்டு, ஜெயலலிதாவால் வளர்க்கபபட்ட இந்த கட்சியை எடப்பாடி பழனிசாமி காத்து வருகிறார். அவரிடம் வட மாவட்டம், தென் மாவட்டம் என்றெல்லாம் பேதம் கிடையாது. தென் மாவட்டங்களிலும் கட்சியில் உயர் பதவிகளில் நிர்வாகிகள் இருக்கிறார்கள். 2021 சட்டமன்ற தேர்தலில் தமிழகம் முழுவதும் 21 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சென்று அனைத்து தொகுதிகளிலும் எடப்பாடி பழனிசாமி வாக்கு சேகரித்தார்.

**நாய் பிடிக்கும் வேலை**

ஆனால் ஓ.பன்னீர் செல்வமோ தனது தொகுதியில் தனக்காக மட்டுமே வாக்கு சேகரித்தார். அவருக்கு எங்கள் தலைவர் எடப்பாடி பழனிசாமி குறித்து பேச தார்மீக உரிமையும் கிடையாது. அருகதையும் கிடையாது. செங்கோட்டையனை பொறுத்தவரையில் மாற்று கட்சிக்கு போய் இங்கிருப்பவர்களை (அ.தி.மு.க.) வாருங்கள் என்று கூப்பிட்டு வருகிறார். நாய் பிடிக்கும் வேலையை அந்த கட்சியில் அவருக்கு கொடுத்துள்ளார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் கே.அசோக்குமார் எம்.எல்.ஏ., மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் பரிதா நவாப் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



■ திமுக கழகத்தின் சார்பில் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனு நேற்று அளித்ததையொட்டி, கழக முதன்மைச் செயலாளரும்டெல்டா மண்டல பொறுப்பாளர், மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு சென்னை இல்லத்தில் போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



■ இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் கச்சத்தீவு புனித அந்தோணியார் கோவில் திருவிழாவிற்கு செல்லும் பக்தர்கள் படகுகள் மூலம் பாதுகாப்பாக செல்வதை பார்வையிட்டு வாழ்த்தி அனுப்பி வைத்தார்.




# சமூகப் பணி துறை மாணவர்களுக்கு எதிர்காலம் குறித்த விழிப்புணர்வு

தஞ்சாவூர், மார்ச்.01-

திருவையாறு அரசர் கல்லூரியில் சமூக பணித்துறை 3 ம் ஆண்டு மாணவர்களுக்கான தன்னம்பிக்கை மற்றும் எதிர்கால கல்விக்கு தேவையான ஊக்கம் குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார்.

தமிழ் பல்கலைக்கழக சமூக அறிவியல் துறைத் தலைவர் முனைவர் சங்கீதா , உதவிப்பேராசிரியர் முனைவர் அறிவானந்தன் ஆகியோர் மாணவர்களுக்கு நாம் எதிலும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை வேண்டும் என்பது குறித்தும் எதிர்கால கல்வியை எப்படி தேர்ந்து எடுத்து வெற்றி பெறுவது என்பது குறித்து ஆலோசனை வழங்கி பேசினர். பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினர் முனைவர் ரமேஷ், சமூகப்பணி துறை பேராசிரியர்கள் விமலா, திவாகர், அன்பரசி வாழ்த்துரை வழங்கினர். இதில் சமூக பணித்துறை மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை மாணவர்கள் பரத், சுதன் ஆகியோர் தொகுத்து வழங் கினர். மாணவி சங்கீதா வரவேற்றார், சோபியா நன்றி கூறினார்.

# தாம்பரம் எம்.சி.சி.கேம்பஸ் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஸ்பெக்ட்ரா 2026 ஆம் ஆண்டிற்க்கான ஸ்டெம் கண்காட்சி திறப்பு விழா

தாம்பரம், மார்ச்.01-

தாம்பரம் எம்.சி.சி.கேம்பஸ் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஸ்பெக்ட்ரா 2026 ஆம் ஆண்டிற்க்கான ஸ்டெம் கண்காட்சி திறப்பு விழா மற்றும் திட்டநாள் (project day) நிகழ்ச்சியில் டி.ஆர்.டி.ஓ தொழில் கல்வி ராமானுஜன் சிறப்பு மையத்தின் இயக்குநர் டாகடர் ராஜா சிங் தங்கதுரை கலந்து கொண்டு பிரம்மோஸ் ஏவுகனையின் செயல் திறன் குறித்து காணொளி காட்சி முலமாக மாணவர்களுக்கு விளக்கமளித்தார்.




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் எம்.சி.சி. கேம்பஸ் மேல்நிலைப் பள்ளியில் ஸ்பெக்ட்ரா 2026 ஆம் ஆண்டிற்க்கான ஸ்டெம் கண்காட்சி திறப்பு விழா மற்றும் திட்டநாள் (project day) நிகழ்ச்சி பள்ளியின் தாளாளர் டாக்டர் மனோகர் தலைமையில் பள்ளியின் முதல்வர் சபையன் பால் துனை முதல்வர் ஜெஸ்டீன் ஜெபா முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சென்னை மெட்ராஸ் இந்தியன் தொழில்துறை நிறுவனம், டி.ஆர்.டி.ஓ தொழில் கல்வி ராமானுஜன் சிறப்பு மையத்தின் இயக்குநர் டாகடர் ராஜா சிங் தங்கதுரை கலந்து கொண்டு மாணவர்களிடம் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் பிரம்மோஸ் ஏவுகனையை திரையிட்டு அதன் செயல்பாடுகள் குறித்தும், மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து ஸ்டெம் கண்காட்சியை திறந்து வைத்து மாணவர்களின் படைப்பாற்றலை பார்வையிட்டு வாழ்த்து தெரிவித்தார். இதில் ஆசிரிய பெருமக்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் என ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர் ராஜா சிங் தங்கதுரை செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில் ஆசியாவிலேயே அறிவியலக்காக முதல் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சர்சிவி ராமன் அதன் ஞாபகமாக அறிவியல் தினம் கொண்டாடபடுகிறது. இது 40 வது தேசிய அறிவியல் தினம் எனவும் இந்த அறிவியல் கண்காட்சி பிள்ளைகளுக்கு வியக்கதக்க வகையில் மெட்ராஸ் கிறிஸ்டீன் கல்லூரியிம் மேல்நிலைப்பள்ளி சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது. மாணவர்கள் தங்களது படைப்புகளை கண்காட்சியாக வைத்திருப்பது அவர்களின் வளர்ச்சிக்கும் அன்றாட வாழ்வில் உள்ள அறிவியலை பயன்படுத்தும் விதமாக அமைந்துள்ளது மிகவும் பாராட்டதக்க ஒன்று எனவும் நாம் விட்டுபோன தொழில்நுட்பத்தை மீண்டும் தொடங்கியுள்ளோம் எனவே இந்தியா விஞ்ஞான வளர்ச்சியில் நன்கு வலுபெறும் என தெரிவித்தார்.

# எஸ்.டி.என்.பி மகளிர் வைணவக் கல்லூரியில் பெண்கள் உச்சி மாநாடு 2026 விழா

பல்லாவரம், மார்ச்.01-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் உள்ள ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் வைஷ்ணவ் மகளிர் கல்லூரி தன்னாட்சி, தனது நிறுவனரின் தொலை நோக்குப் பார்வையைப் போற்றும் வகையில் பெண்கள் உச்சி மாநாடு 2026' (Women's Summit 2026) என்ற பிரம்மாண்ட நிகழ்வை நடத்தியது. கல்லூரியின் தொலை நோக்கு சிந்தனையாளர் ஸ்ரீ நானாலால் பட் அவர்களின் 125வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்த உச்சிமாநாடு அமைந்தது.



"தடைகளை உடைத்தல், பாரம்பரியங்களை உருவாக்குதல் கனவு கண்டு, துணிந்து, தங்கள் விதியை வடிவமைத்த பெண்களைக் கொண்டாடுதல்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இந்த மாநாடு நடைபெற்றது. முன்னதாக, ஆரோக்கிய நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சமூக நல மருத்துவப் பரிசோதனைகள் போன்ற பல்வேறு செயல்பாடுகள் நடத்தப்பட்டன.

**முக்கிய உரைகள்:**

நிகழ்வின் தொடக்க உரையை வேல்ஸ் கல்வி குழுமத்தின் துணைத் தலைவர் டாக்டர் பிரீத்தா கணேஷ் வழங்கினார். தொடர்ந்து, குளோபல் அட்ஜஸ்ட்மெண்ட்ஸ் அறக்கட்டளையின் நிறுவனர் டாக்டர் ரஞ்சினி மணியன் "சவால்களை வெற்றிகளாக மாற்றுதல்" என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார். ஜி.ஜி மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் பிரியா செல்வராஜ்* பேசுகையில், மாற்றத்தை ஏற்படுத்தும் வளர்ச்சியில் புதுமை மற்றும் வழிகாட்டுதலின் அவசியத்தை வலியுறுத்தினார். தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சி.இ.ஓ லட்சுமி மேனன் பெண்களின் குரல் மற்றும் தொலைநோக்குப் பார்வையின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

**சிறப்பு அமர்வுகள்**

கிராமி விருது வென்ற தன்வி ஷா உள்ளிட்ட பல்வேறு துறை சாதனையாளர்கள் பங்கேற்ற "கண்ணாடி விதானங்களை உடைத்தல்: வெற்றியை மறுவரையறை செய்தல் என்ற கலந்துரையாடல் நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்தது. மேலும், தேசிய வில்வித்தை வீராங்கனை டாக்டர் யு.பி. சஞ்சனா, மாணவர்களிடையே தன்னம்பிக்கை குறித்துப் பேசினார்.

மாநாட்டின் நிறைவுரையை ஆற்றிய புதுச்சேரியின் முன்னாள் துணை நிலை ஆளுநர் டாக்டர் கிரண் பேடி (IPS Retd.), "தடைகளை உடைத்தல் நோக்கத்துடன் வழிநடத்துதல்" என்ற தலைப்பில் ஆற்றிய உரை மாணவர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் பேசுகையில், "இளம் பெண்கள் வரதட்சணை முறையைத் திட்டவட்டமாக மறுக்க வேண்டும். தரமான கல்வியைப் பெறுவதோடு, நவீன உலகில் சிறந்து விளங்க தொழில்நுட்பத் திறன் கொண்டவர்களாக மாற வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

மேலும், பயமின்மை மற்றும் நிதி சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர், உண்மையான அதிகாரம் என்பது சுய நம்பிக்கை மற்றும் சம வாய்ப்புகளில் இருந்தே தொடங்குகிறது என்றார். "நிமிர்ந்து நில்லுங்கள்; இந்தியாவின் எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் வடிவமைக்க முன்வாருங்கள்" என மாணவர்களுக்கு அவர் உத்வேகம் அளித்தார்.

இந்த நிகழ்வில் கல்லூரித் தலைவர் மம்தா டி. பட் முதல்வர் (பொறுப்பு) டாக்டர் கே.காந்திமதி, கல்லூரி சுய உதவிப் பிரிவின் இயக்குநர் முனைவர் எம்.எஸ். விஜயா, மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் முனைவர் சாந்தி மற்றும் பல முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். சாதனை படைத்த மாணவிகளைக் கௌரவிக்கும் கேர்ள்ஸ் ஆஃப் கிரிட்" (Girls of Grit) மற்றும் 'ஸ்வர' இசைக்குழுவின் கலை நிகழ்ச்சியுடன் விழா இனிதே நிறைவடைந்தது.




■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 53வது வட்டம் சார்பில் பகுதி அவை தலைவரும் மாமன்ற உறுப்பினர் டி.ஆர்.கோபி அவர்கள் தலைமையில், மாநகர பிரதிநிதி எஸ்.சரவணன் அவர்கள் வரவேற்புரையில் கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, நலத்திட்ட உதவிகள் வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, 4வது மண்டலக்குழு தலைவர், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ், 5வது மண்டலக்குழு தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.இந்திரன் தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# தேசிய அறிவியல் தினத்தின் நாயகன் சர். சி. வி. ராமன்: பிப்ரவரி 28 தேசிய அறிவியல் தினம்

“ஏன் என்று எதற்கு என்று
கேள்விகள் கேட்போமே
அறிவியல் வழியினில் வாழ்வோமே!

இவ்வுலகில் அறிவுசார் சான்றோ ர்களும், மொழியியல் வல்லுநர்களும், புரட்சி நாயகர்களும், அரசியல் வித்தகர்களும், அறிவியலில் சிறந்தவர்களும் வெவ்வேறு காலங்களில் உதித்துக்கொண்டே தான் இருக்கிறார்கள். இந்த உலகம் சம நிலையுடன் இயங்க இத்தகைய பிறப்புகள் மிக அவசியம்.

ஏன் ? எதற்கு ? எப்படி ? என்ற சிந்தனையை அறிவியல் நம்முள் விதைத்து கொண்டே இருக்கிறது. இது அறிவியல் மனப்பான்மையை மேலோங்க செய்கிறது. ஏன் உறங்க வேண்டும்? நம் இதயம் எப்படி துடிக்கிறது? உயிரினங்கள் எதற்காக சுற்றுச்சூழல் மண்டலத்தைச் சார்ந்து வாழ்கின்றன? இது போன்ற கோடிக்கணக்கான வினாக்களுக்கு விடை தேட வேண்டியது அவசியமாகிறது. இவற்றுள் சில வினாக்களுக்கு விடை கிடைத்திருந்தாலும், இன்னும் தேட வேண்டியது பல உள்ளன. தேடிக் கொண்டே இருக்கிறோம் !

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28 ஆம் நாள் இந்தியாவில் தேசிய அறிவியல் தினம் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் தேசிய அறிவியலின் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் என்ன ? இந்தக் கேள்விக்கான விடையை ஒற்றை வார்த்தையில் கூற வேண்டுமானால் சர்.சி.வி.ராமன் என்று சொல்ல முடியும். யார் இந்த சர்.சி.வி. ராமன்? சர்.சி. வி. ராமனுக்கும், பிப்ரவரி 28 க்கும் என்ன தொடர்பு? இதற்கான பதிலைத் தேடுபவர்கள் இந்தக் கட்டுரையைப் படிக்க வேண்டும்.

நவம்பர் 7, 1888 ஆம் ஆண்டு திருச்சியில் சந்திரசேகரன் பார்வதி இணையினருக்கு மகனாய் அவதரித்தவர் சர்.சி. வி. ராமன். இவரின் இயற்பெயர் சந்திரசேகர வேங்கட ராமன். இவரின் தந்தை ஒரு பேராசிரியர்.

1908 ஆம் ஆண்டு ஆஷுபாபுவும், சர். சி. வி. ராமனும் இணைந்து எழுதிய அறிவியல் கட்டுரை லண்டன் ராயல் கழக அறிவியல் பத்திரிக்கையில் வெளிவந்தது. அதற்காக ராமன் மீது பிரிட்டிஷ் அரசு ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. அரசுப் பணியில் இருந்த ராமனுக்கு பல இடையூறுகளை அந்த அரசு ஏற்படுத்தியது. பணியிட மாற்றம் என்ற பெயரில் அவரைப் பந்தாடியது.

அரசு வேலையை உதறிய ராமன் கொல்கத்தாவில் உள்ள விஞ்ஞான வளர்ச்சிக்கான அறிவியல் கழகத்தில் தன் ஆராய்ச்சியை மேற்கொண்டார்

பிப்ரவரி 28, 1928 அன்று ஒளிச் சிதறல் குறித்த தனது ஆய்வு முடிவை “ராமன் விளைவு” என்ற பெயரில் உலகிற்கு அறிவித்தார். “ஒரு பொருளின் வழியாக ஒளி ஊடுருவிச் செல்லும் போது சிதறடிக்கப்படுகிறது.” அதாவது வாயுக்கள் அல்லது திரவங்கள் அல்லது ஒளிபுகும் தன்மை கொண்ட திண்மங்கள் வழியாக வெண்மை நிற ஒளியானது இணைக் கற்றைகளாக செல்லும்போது அவற்றின் ஒரு பகுதி சிதறல் அடைகிறது. இதுவே ‘ராமன் விளைவு “ஆகும். உதாரணத்திற்கு, மழை பெய்து முடிந்தவுடன் சில சமயம் வானில் வானவில்லை (Rainbow) நாம் பார்ப்பது உண்டு. வானவில் எப்படி தோன்றுகிறது ? என்பதற்கான விளக்கத்தை கொடுத்தவர் சர் சி. வி. ராமன். வெண்மை நிற சூரிய ஒளியானது வாயு மண்டலத்தில் உள்ள மழைத்துளிகளால் சிதறடிக்கப்படுகிறது. ஆகவே தான், வெண்ணிற சூரிய ஒளியானது ஏழு வண்ணங்களைக் கொண்ட அழகிய வானவில்லாக நம் கண்களுக்கு சில நிமிடங்கள் வானவில்லாக விருந்தளிக்கிறது. வெள்ளொளி பல வண்ணங்களாக காட்சியளிப்பது நிறமாலை ஆகும். ஒரு ஒளிக் கதிர் (வெள்ளொளி) பல நிறங்களாகப் பிரிவது நிறப்பிரிகை ஆகும்.

வானவில்லில் உள்ள நிறங்கள் ஊதா (VIOLET), கருநீலம் (INDIGO), நீலம் ( BLUE), பச்சை (GREEN), மஞ்சள் (YELLOW ), ஆரஞ்சு (ORANGE) மற்றும் சிவப்பு (RED) ஆகும். சுருக்கமாக இவை VIBGYOR என்று அழைக்கப்படுகிறது.

ஒளி சிதறல் நடையும் போது ஒளியின் ஆற்றலிலும், அலை நீளத்திலும் மாற்றம் ஏற்படுகிறது. இதை விளைவாக ஒளிப்பிரிகை ஏற்படுகிறது.

ராமனின் இந்த ஆய்வு ஒரு பொருளின் மூலக்கூறு அமைப்பை கண்டறியவும், தடயவியல், வானியல் உள்ளிட்ட அறிவியலுக்கும் மிகவும் உதவியாக இருந்து வருகிறது.

கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், இந்திய அறிவியல் கழகத்தில் (IISc) இயற்பியல் துறைத் தலைவராகவும் பணியாற்றிய பெருமை சர். சி.வி. ராமனுக்கு உண்டு..

அமைதியான வழியை நாடும் கண்டுபிடிப்புகளுக்கும், அனைவராலும் பயன்ப டுத்தக் கூடியதாக இருக்கும் அறிவியல் ஆய்வுகளுக்கு மட்டுமே நோபல் பரிசானது வழங்கப்படும். இதை பூர்த்தி செய்திடும் வகையில் 1928ல் சர். சி. வி. ராமன் ஒளிச்சிதறல் ஆய்வை மேற்கொண்டு சரியான விளக்கத்தை கொடுத்ததற்காக மார்ச் 16, 1930 ஆம் ஆண்டு அவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1919 ஆம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசை இந்தியாவைச் சேர்ந்த ரவீந்திரநாத் தாகூர் பெற்றிருந்தாலும், அறிவியல் ஆராய்ச்சிக்காக ஒரு இந்தியர் பெற்ற முதல் நோபல் பரிசு “” ராமன் விளைவுக்காக” சர்.சி.வி. ராமன் பெற்றதே ஆகும்.

ஒரு அறிவியல் ஆராய்ச்சிக் கருத்தை வெளியிட்டு குறைந்த நாட்களில் நோபல் பரிசு பெற்ற சிறப்பு சர். சி.வி. ராமனுக்கு உண்டு. ஆம், பிப்ரவரி 28, 1928 இல் தனது ஆராய்ச்சிக் கட்டுரையை வெளியிட்டு மார்ச் 16, 1930 அதாவது இரண்டு வருட காலத்தில் சர். சி. வி. ராமனுக்கு நோபல் பரிசு கிடைத்தது.

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் படித்த பெருமையுடைய சர்.சி.வி. ராமன் இளங்கலை மற்றும் முதுகலை இயற்பியலில் தங்கப் பதக்கம் பெற்றார். கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், இந்திய அறிவியல் கழகத்தில் (IISc) இயற்பியல் துறைத் தலைவராகவும் பணியாற்றிய பெருமையும் சர். சி. வி. ராமனுக்கு உண்டு. இந்திய அறிவியல் அகாடமியை நிறுவியதுடன், 1948 இல் பெங்களூரில் ராமன் ஆராய்ச்சி நிறுவனத்தையும் நிறுவினார்.

சர். சி. வி. ராமன். பெற்ற விருதுகள்:

*இங்கிலாந்து அரசு சர் பட்டம்

*லண்டனில் உள்ள ராயல் சொசைட்டியின் ஃபெல்லோசிப் 1924*இத்தாலி மேட்யூச்சி பதக்கம்

*1929 பிரிட்டிஷ் பேரரசால் நைட்ஹூட் பட்டம்

* 1929 இங்கிலாந்து அரசின் சர் பட்டம்

* 1935 மைசூர் அரசர் ராஜ் சபா பூசன் பட்டம்

* 1954 இந்திய அரசின் மிக உயரிய விருதான பாரத ரத்னா

* 1957 லெனின் அமைதிப் பரிசு

தனது இளமைக்காலம் முதல் அறிவியல் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த ராமன் மிகக் குறைவான விஞ்ஞானிகள் இந்தியாவில் இருந்த காலகட்டத்தில், அறிவியல் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் மிக குறைவாக இருந்த சூழ்நிலையில் அறிவியலில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தினார். ஒட்டுமொத்த உலகையும் இந்திய அறிவியல் ஆராய்ச்சியை முதன்முதலாக திரும்பிப் பார்க்க செய்த பெருமை சர். சி. வி. ராமனுக்கே உண்டு. தனது ஒளிச் சிதறல் குறித்த ஆய்வை கண்டறிய உபகரணத்தை வழங்கிட அல்லது அதை வாங்குவதற்கான பணத்தை தனக்கு அளிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசை அவர் கேட்டுக்கொண்டார். அவருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. மனம் தளராத ராமன் அந்த உபகரணத்தை தானே கண்டுபிடித்து அனைவரையும் வியப்பில் வாழ்த்தினார்.

ஒளிச் சிதறல் குறித்த தனது ஆய்வான ராமன் விளைவை (Raman's effect) சர். சி. வி. ராமன் இந்த உலகிற்கு பிரகடனப்படுத்திய நாள் பிப்ரவரி 28, 1928 ஆகும். அந்த நாளை தான் நாம் ஒவ்வொரு ஆண்டும் தேசிய அறிவு தினமாக இந்தியாவில் கொண்டாடி வருகிறோம்.

எதையும் மேலோட்டமாக கற்றுக் கொள்ளக் கூடாது. ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கூர்மையாக கவனிக்க வேண்டும். அறிவியல் நோக்கத்தோடு ஒவ்வொன்றையும் கற்க வேண்டும் என்ற சர். சி. வி. ராமன் ஒளிச்சிதறல் குறித்த தனது ஆராய்ச்சியை நுட்பமாக மேற்கொண்டு அதன் முடிவை தெளிவாக வெளியிட்டு சுமார் நூறாண்டுகளை நெருங்கி உள்ளோம். சர். சி. வி. ராமன் காலத்திற்குப் பிறகு அறிவியலில் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது.

சர். சி. வி. ராமன் நவம்பர் 21, 1970 அன்று இவ்வுலக வாழ்வில் இருந்து விடைபெற்ற போதும் நோபல் பரிசில் இடம் பெற்ற அவரது பெயரும், அவரது ஆராய்ச்சியும் இந்தியர்களின் அறிவியல் ஆராய்ச்சியில் ஆலமரத்தின் வேராக உள்ளது.

சர்.சி.வி ராமன் போன்ற விஞ்ஞானிகள் காட்டிய வழியில் கல்லூரி மாணவர்களும், ஏன் பள்ளி மாணவர்கள் கூட வியத்தகு அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். சமீபத்தில் சிவகங்கை மாவட்டம் அரியக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த 13 மாணவர்களை கொண்ட குழு தங்களால் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோளை விண்ணில் ஏவிய அதிசய நிகழ்வு நடந்தது ஒட்டுமொத்த இந்தியாவையும் அவர்களின் சாதனை அறிவியல் ஆராய்ச்சி பக்கம் திரும்பி பார்க்க வைத்தது.

அறிவியல் மனப்பான்மை கொண்ட தேசத்தினை உருவாக்கிட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் குழந்தைகள் அறிவியல் மாநாடு, துளிர் திறனறிதல் தேர்வு, வினாடி வினா போட்டி, அறிவியல் கருத்தரங்குகள், மூடநம்பிக்கை ஒழிப்பு பிரச்சா ரங்கள் போன்றவற்றை தொடர்ந்து தன்னார்வத்துடன் செய்து வருகிறது.

அறிவியல் துறையில் இந்தியா நோபல் பரிசு பெற்று பல ஆண்டுகள் ஆகிவிட்டது. இன்றைய விஞ்ஞானிகளுக்கும், இளம் தலைமுறையினருக்கும் அதற்கான கதவு திறந்தே உள்ளது. சர். சி. வி. ராமனைப் போல் இந்தியர் ஒருவர் நோபல் பரிசை பெறும் காலம் வெகு தூரத்தில் இல்லை..

முயற்சிகள் தொடரட்டும்...

அறிவியலில் இந்தியா இன்னும்

பல புதுமைகளை படைக்கட்டும்...



மகா பிரபு
கட்டுரையாளர் - பட்டதாரி ஆசிரியர்
கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி,
கல்லல் 630 305
சிவகங்கை மாவட்டம்
அலைபேசி: 9944089151

## சிவகங்கையில் அரசு பணியாளர்களுக்கான கருத்தரங்கில் வழக்கறிஞர் அருள் ஜெயராஜ் உரை

சிவகங்கை, மார்ச்.01-

சிவகங்கை மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மாவட்ட அரசு பணியாளர்களுக்காக நடைபெற்று வரும் மூன்று நாள் கருத்தரங்கில், சிவகங்கை வழக்கறிஞர் அருள் ஜெயராஜ், MSW., LL.B., சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.







“பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் திட்டங்கள் மற்றும் சட்டங்கள்” என்ற தலைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் தொல்லை தடுப்பு சட்டமான POSH Act, 2013 (Sexual Harassment of Women at Workplace - Prevention, Prohibition and Redressal Act) குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

அவர் தனது உரையில் சட்டத்தின் தோற்றம், நோக்கம் மற்றும் உள்ளார்ந்த ஆவி, வளர்ச்சி மற்றும் பரிணாமம், நடைமுறை அமலாக்கத்தில் உள்ள சவால்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பிற பாதுகாப்பு சட்டங்கள், தடுப்பு நடவடிக்கைகளில் அரசு அலுவலர்களின் பொறுப்புகள் மற்றும் சமீபத்திய தீர்ப்புகள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு என்பது சட்டப்பொறுப்பு மட்டுமல்ல, சமூகப் பொறுப்பும் ஆகும் என்பதை வலியுறுத்திய அவர், அரசு அலுவலர்கள் விழிப்புணர்வுடன் செயல்பட்டு பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.



## ஊத்துக்கோட்டையில் புரட்சிபாரதம் கட்சியின் தலைவர் பூவை வி.ஜெகனமூர்த்தியார் AVM சினிமா புதிய திரையரங்கத்தை திறந்து வைத்தார்

திருவள்ளூர், மார்ச்.01-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் ஏ.வி.எம். சினிமா திரையரங்கம் புதுப்பிக்கப்பட்டு 27.02.2026 காலை 10:30 மணியளவில் புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் டாக்டர் பூவை எம்.ஜெகமூர்த்தி அவர்களால் ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார் முன்னதாக திருவள்ளூர் வடமேற்கு மாவட்டம் மற்றும் ஊத்துக்கோட்டை நகரம் மற்றும் திரையரங்கு உரிமையாளர்ள் சார்பில் பட்டாசு வெடித்து மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி சிறப்பானவரவேற்பு அளித்தனர்.

மெலும் இவ் விழாவில் திரையரங்கு உரிமையாளர்கள் AVM பாலாஜி, புஜ்ஜி மற்றும் வழக்கறிஞர் அணியின் மாநில செயலாளர் கே எம் ஸ்ரீதர் மாநில செயலாளர் பூண்டி பாபு வடமேற்கு மாவட்ட செயலாளர் கராத்தே ப.வில்சன் மற்றும் மாநில செயலாளர் தளபதி செல்வம் ஒதிகை தாமஸ் துரைமுருகன் மற்றும் வடமேற்கு மாவட்ட துணை துணைச் செயலாளர் D.செல்வம் இணை செயலாளர் KDM தீனா ஊத்துக்கோட்டை நகர செயலாளர் நாகராஜ் பொருலாளர் அப்புன் (எ) இளைய குமார் பாலவாக்கம் கோபிகிருஷ்ணா பேரண்டூர் டேவிட் மற்றும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் பதிப்பு செம்மல் ச. மெய்யப்பனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

தேவகோட்டை.
மார்ச்01

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரித் தமிழ்த்துறை சார்பாக பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது இந்நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கண்ணதாசன் வரவேற்றார் கல்லூரித் தலைவர் அண.லெட்சுமணன் செட்டியார் தலைமை ஏற்று நிகழ் வைத் தொடங்கி வைத்தார் அவர்தம் தலைமை உரையில் ச. மெய்யப்பனாரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறி பதிப்புத் துறையில் அவர் படைத்த சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசினார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் நாவுக்கரசு வாழ்த்துரை வழங்கினார் அவர்தம் வாழ்த்துரையில் சி.வை. தாமோதரம் பிள்ளை உ.வே.சா போன்ற பதிப்பாசிரியர்களின் வரிசையில் காலத்தால் அழியாத புகழைப் பெற்றவர் மெய்யப்பனார் எனப் புகழாரம் சூட்டினார் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் கலா காசிநாதன் தொட்டனைத் தூறும் மணற்கேணி என்னும் தலைப்பில் உரையாற்றினார். இன்றைய இயந்திர உலகில் வாழும் மனிதர்கள் தொழில்நுட்ப அறிவோடு வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் இலக்கியப் புரிதலோடு தொழில்நுட்பத்தைக் கையாண்டால் மட்டுமே இந்த உலகை வெல்ல முடியும் திருக்குறளில் இளைஞர்களுக்கான வாழ்க்கைத் தத்துவம் அடங்கி இருப்பதை இன்றைய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தோடு பொருத்தி வாழ்க்கையில் வெற்றி காண வேண்டும் எனப் பேசினார் இந்நிகழ்ச்சியில் இளங்கலை முதுகலைத் தமிழ்த்துறை மாணவர்கள் கல்லூரியின் இளங்கலை முதலாம் ஆண்டு அனைத்துத் துறை மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியின் நிறைவில் தமிழ்த்துறைப் பேராசிரியர் பதிப்பு செம்மல் ச மெய்யப்பனார் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் முனைவர் கண்மணி நன்றி கூறினார் இந்நிகழ்வை இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவிகள் ஹெல்சா மற்றும் ஜெனிபர் தொகுத்து வழங்கினர்..









■ தேனி மாவட்டம் கம்பம் அஇஅதிமுக தேனி (மே)மாவட்டம் மகளிரணி சார்பாக புரட்சி தலைவி அம்மா 78வது பிறந்தநாள்தினத்தை முன்னிட்டு மகளிரணி(மே)மாவட்ட துணைச்செயலாளர் ஆனந்தி, பாரதியார் நகர் சிவணடியார் மண்டபத்தில் மாபெரும் அன்னதான நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் (மே)மாவட்டச் செயலாளர் STK ஜக்கையன் ExMLA,M.P கழக அமைப்புசெயலாளர், கம்பம்(வ) நகரசெயலாளர் M.R கார்த்திகேயன் ExM.C, (தெ) நகரசெயலாளர் M.கணபதி, மற்றும் நகர கழக நிர்வாகிகள், இந்நாள், முந்நாள் கட்சி நிர்வாகிகள் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர். -





■ திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள அலங்கியம் கிராமத்தில் கடந்த சில ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் குறைவாக இருந்து வந்தன. குடிநீர், சாலை, பொதுமக்கள் பயன்பாட்டு வசதிகள் உள்ளிட்ட பிரச்சினைகளை முன்னிறுத்தி அரசாங்கத்திடம் கொண்டு சேர்த்தார் இதை தொடர்ந்து அரசு நடவடிக்கை எடுத்தது. இதற்க்காக தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ம. கோகுல்ராஜ். அவரது சமூகப் பணிகளை பாராட்டி, நேற்று கோவையில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில் அவருக்கு “சிறந்த சமூக சேவகர்” விருது வழங்கப்பட்டது. பொதுமக்களின் நலனில் தொடர்ந்து செயல்பட்டு வரும் அவரது முயற்சிக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.



■ விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள் சென்னை, அண்ணா அறிவாலயத்தில், விழுப்புரம் சட்டபேரவை தொகுதியில் மீண்டும் போட்டியிட விருப்ப மனுவை தலைமை கழகத்தில் வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் மற்றும் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161